[பிற்பகல் 12–10]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு: அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லை என்ற காரணத்தினால், இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

உ. வடாற்காடு மாவட்டம், தி. அ. மங்கலத்தில் மின் துண்டிப்பு வேண்டாம் என முறையிட்ட விவசாயிகள் கைது செய்யப் பெறுவது குறித்து—

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வட ஆற்காடு மாவட்டம், வந்தவாசி வட்டம், கீழ்க்கொடுங்களூர் அடுத்த தி. அ. மங்கலத்தில் மின் வாரியத்தினர் ஏப்ரல் 4-ந் தேதி முதல் மின் துண்டிப்பு இராது என அரசு கொடுத்த வாக்குறுதியை மதியாது மின் துண்டிப்பு செய்ய முற்படுவது அறிந்து மின்வாரிய அலுவலகம் சென்று துண்டிப்பு வேண்டாம் என முறையிட்ட விவசாயிகள் கைது செய்யப்பட்டது குறித்தும், அதனால் ஏற்பட்டுள்ள நிலை குறித்தும் விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டு,

1. திரு. ப. சுந்தரம்,

2. திரு. தா. வேணுகோபால்.

ஆகியோர் தீர்மானம் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன், திரு. ப. சுந்தரம்.

திரு. ப. சுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம், வந்தவாசி தாலூகாவிலுள்ள, கீழ்க் கொடுங்களூரை அடுத்த தி. அ. மங்கலத்தில் மின் துண்டிப்பு இராது என்று அரசு ஏப்ரல் 3-ம் தேதி ஆணையிட்டும், அதை மதியாது மின்சாரத் துறையினர் மின் துண்டிப்பை செய்து விட்டுப் போகும்போது, கொடுங்களூரைச் சேர்ந்த 15 விவசாயிகள் மின்சாரத் துறையினரிடம் முறையிட சென்றபோது, அந்த 15 விவசாயிகளை கைது செய்து, வேலூர் மத்திய சிறைக்கு அனுப்பப் பட்டு, அவர்கள்மீது 141, 147, 353, 701 ஆகிய செக்ஷன்களை அவர்கள்மீது போட்டு, வேலூர் மத்திய சிறைக்கு அனுப்பப் பட்டிருக்கிறார்கள். இதைப் பற்றி கேட்க விவசாயிகள் வந்தவாசி தாலூகா ஆபீசுக்கு முறையிடச் சென்ற போது, 1,000 விவசாயிகளை அந்த தாலூகா அலுவலகத்திற்குள்ளேயே அடைத்து வைத்து, அங்கே ஆயுதம் தாங்கிய 400 போலீசை

அழைத்திருப்பதால், அங்கே பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, இதைப் பற்றி விவரமாக விவாதிக்க, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானமும், முன்பு பேசிய ஒத்திவைப்புத் தீர்மானத்தின் அடிப்படையிலே அமைந்திருக்கிறது. இதிலே என்ன நடைபெற்று விட்டதென்றால், அங்கே இருந்த மின்சாரத் தொழிலாளி, தானாகவே போய் டிஸ்-கனெக்ட் செய்து விட்டார். நாம் கொடுத்த அறிவிப்பு அங்கே போய்ச் சேருவதற்கு முன்னாலேயே இது நடைபெற்று விட்டது. இது சம்பந்தமாக அப்படிச் செய்யக் கூடாது என்ற அடிப்படையில் மின் வாரியத்திற்கு, அவர்கள்மீது தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறோம். இதைத்தான் மாண்புமிகு லத்தீப் அவர்கள் இங்கே பேசும்போது குறிப்பிட்டார்கள். ஆகவே, இனிமேல் இத்தகைய காரியங்கள் வராமல் பார்த்துக் கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்ற அடிப்படையில், இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து, விவாதிக்கத் தேவையில்லை என்று கூறி அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லை என்ற காரணத்தினால், இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

(5) கவன ஈர்ப்புகள்.

(அ) கிருஷ்ணகிரி நீர்த்தேக்க பாசன நிலங்களுக்கு அதிகமாக தண்ணீர்த் தீர்வை விதிக்கப் பெறுவது குறித்து.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, '' தர்மபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி நீர்த் தேக்கத்திலிருந்து பாசன வசதி பெறும் நிலங்களுக்குத் தண்ணீர் தீர்வையுடன் கூடிய அதிகத் தொகை தீர்வையாக விதித்ததால் நிலவும் பதட்ட நிலை குறித்து '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.